

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அழியாநிலை ஊராட்சியில் வாழக்குடியிருப்பு மயானம் செல்லும் சாலையை தார்ச்சாலையாக அமைக்கும் பணிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (02.09.2025) அடிக்கல் நாட்டினார்.



திராவிட_மாடல் அரசின் சேவைகளை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்த்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் உங்களுடன்_ஸ்டாலின் திட்ட முகாம், திருவெறும்பூர் மற்றும் கிழக்குத் தொகுதி மாநகர வார்டு 49ல் வசிக்கும் மக்களுக்காக சங்கிலியாண்டபுரம் மெயின் ரோட்டில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. அதனை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்து உடனே தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கான ஆணைகளைப் பயனாளிகளிடம் வழங்கினார். இந்நிகழ்வில் கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதய ராஜ், மண்டல குழு தலைவர்கள் மு.மதிவாணன், ஜெய நிர்மலா, மாமன்ற உறுப்பினர் லீலா வேலு, மண்டலம் மண்டலம் இரண்டின் உதவி ஆணையர் ஜெயந்தி, உதவி செயற்பொறியாளர் இப்ராஹிம், வட்டாட்சியர் விக்னேஷ்,துணை வட்டாட்சியர் கார்த்திகேயன், இளநிலை பொறியாளர் ரவிக்குமார், சுகாதார அலுவலர் பாலமுருகன்,சுகாதார ஆய்வாளர் டேவிட் முத்துராஜ், முகாமில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்று வருகின்றனர்.

## கழக முப்பெரும் விழா - 2025

# முன்னிட்டு கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் நடைபெறும் செயல்வீரர்கள் - வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

| வ. எண் | தேதி | நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 1 | 05.09.2025 | மாலை 6 மணி | அரவக்குறிச்சி தொகுதி | சிவசெல்வி மஹால், சின்னதாராபுரம் |
| 2 | 06.09.2025 | மாலை 6 மணி | கிருஷ்ணராயபுரம் தொகுதி | சக்தி மஹால், உப்பிடமங்கலம் |
| 3 | 07.09.2025 | மாலை 5 மணி | குளித்தலை தொகுதி | சுபம் மஹால், அய்யர்மலை குளித்தலை |
| 4 | 09.09.2025 | மாலை 6 மணி | கரூர் தொகுதி | பிரேம் மஹால், கரூர் |

மேற்கண்ட செயல்வீரர்கள், வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் - பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர், வார்டு, கிளை சார்பு அணி நிர்வாகிகள், வார்டு - கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ.**
செயலாளர்,
கரூர் மாவட்ட தி.மு.க.





ஈரோடு மாவட்டம் எல்லைக்காட்டுப்பதூர் பகுதியில் நேற்று (03.09.2025) முழுநேர நியாயவிலைக்கடையை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் திறந்து வைத்தார். உடன் பொதுமக்களும் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்டத்தில் — வளரிளம் பருவ கர்ப்பத்தைத் தடுக்க

# தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

தேனி செப். 4 -

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் மேகமலைமணலார் பகுதியில் நேற்று முன்தினம் (02.09.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தமிழ்நாட்டில் வளரிளம் பருவத்தில் அதிகமாக கர்பங்கள் நிகழும் 24 வட்டாரங்களில் தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங், தங்க தமிழ் செல்வன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன், ஆ.மகாராஜன், கே.எஸ்.சரவணக்குமார் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் தமிழ்நாட்டில் வளரிளம் பருவத்தில் கர்ப்பங்கள் நிகழும் 24 வட்டாரங்கள் அடையாளம் காணப்பட்டு, அந்த வட்டாரங்களில் உள்ள மக்களுக்கு தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள்.

அதனடிப்படையில் இன்றைய தினம் இத்திட்டம் தமிழ்நாட்டில் தேனி உட்பட, 10 மாவட்டங்களில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் மொத்தம் உள்ள 8 வட்டங்களில் 6 வட்டங்களில் வளரிளம் பருவத்தில் கர்ப்பங்கள் அதிகமாக நிகழ்வதால் இத்திட்டம் மேகமலையில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. 24 வட்டாரங்களில் ஒரு துணை சுகாதார மையத்திற்கு 5 கிராமங்கள் வீதம் 2320 கிராமங்களில் தெரு நாடகங்கள் நடைபெற உள்ளது.

பெண்கள் இளம்வயதில் திருமணம் செய்யும்போது, பெண்களின் கர்ப்பப்பை, கர்ப்பத்தை தாங்கும் அளவிற்கு வளர்ச்சி அடைந்திருக்காது. இதனால் குழந்தை மற்றும் தாய்க்கும் பாதிப்பு ஏற்படும். இதுதொடர்பாக, சமூகநலத்துறையின் சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும் மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பிலும் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, கலைக்குழுவினர் மூலம் தெருநாடகங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கலைக்குழுவினர் மூலம் வளரிளம் பருவத்தினர் மற்றும் சமூகத்தினரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இளம்வயது கர்ப்பத்தினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் தடுக்கும் முறைகள் குறித்து தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி சமூக மாற்றுத்தை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்ற தொகுதி அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் எண்ணமங்கலம் ஊராட்சி மூங்கில் பாளையம் முதல் ஆலையங்கரடு வரை செல்லும் சாலையில் தார் சாலை அமைத்திட மாநில மூலதன முதலீடு சிறப்பு உதவி திட்டம் 2025/2026 திட்டத்தின் கீழ் ஒரு கோடியே ஒன்பது இலட்சத்து இருபதாயிரம் மதிப்பீட்டில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம் பணிகளை துவக்கி வைத்தார். நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலு வலர் சரவணன், உதவி செயற்பொறியாளர்கள் மதன், ரமேஷ், அம்மாபேட்டை வடக்கு ஒன்றிய கழக அவைத்தலைவர் சுப்பிரமணியம், மாவட்ட பிரதிநிதி மாணிக்கம், ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் அய்யாசாமி, ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் அருள், எண்ணமங்கலம் பெரியசாமி, மூங்கில் பாளையம் சின்னு, செல்லம்பாளையம் லோகு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டையில் இயங்கி வரும் செவித்திறன் குறைபாடு உள்ள மாற்றுத்திறனாளிகள் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் நலன் கருதி புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பள்ளி மாணவச் செல்வங்களுக்கு பெஞ்ச் டெஸ்க் 2.9.2025 செவ்வாய்க்கிழமை அன்று மாணவர்களின் பயன்பாட்டிற்கு புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா வழங்கினார். இந்நிகழ்வில் மாநகர மேயர் செ. திலகவதி செந்தில், துணை மேயர் எம் லியாகத்அலி, மாற்றுத்திறனாளிகள் மாவட்ட நல அலுவலர் புவனா, பள்ளி ஆசிரிய பெருமக்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்பினர், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


நீத்தார் நினைவேந்தல் நிகழ்வு









சேலம் மாவட்ட தி.மு.கழக செயலாளரும், தமிழ்நாடு வேளாண்மைத்துறை முன்னாள் அமைச்சருமான
மறைந்த திரு. வீரபாண்டியார் அவர்களின் துணைவியும்
எனது தாயாருமான
திருமதி. A.லீலா ஆறுமுகம்
அவர்களின்
நினைவேந்தல் நிகழ்வு
அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு
அன்னையாரின் நினைவைப் போற்றிட அழைக்கின்றோம்.
நாள் : 04.09.2025 வியாழக்கிழமை / நேரம் : காலை 10.00 - 11.00
இடம் : பூலாவரி வீரபாண்டியார் தோட்டம்
நினைவைப் போற்றி வணங்கும்
Dr. வீரபாண்டி ஆ.பிரபு MBBS.,
சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞரணி அமைப்பாளர்
செயலாளர் - VSA கல்வி நிறுவனங்கள் & அறக்கட்டளை